[2019] 15 எஸ்.சி.ஆர். 1

ABCD

எதிராக

இந்திய அரசு மற்றும் பலர்

நீதிப்பேராணை மனு (குற்றவியல் எண். 191/2018)

டிசம்பர் 10,2019

மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. இந்து மல்ஹோத்ரா

புலன் விசாரணை: புலன் விசாரணையை மத்திய நிறுவனத்திற்கு மாற்றுதல்–எதிர்மனுதாரர் எண். 7 க்கு எதிராக மனுதாரர் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை எண். 58/2018 – எதிர்மனுதாரர் எண். 7 அவளது சூழ்நிலையை தவறான முறையில் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அவளுடன் வலுக்கட்டாயமாக உடலுறவு கொண்டதாகவும் குற்றம் சாட்டிய காவல் அதிகாரி– செயலுறுத்தும் நீதிப்பேராணை டெல்லி காவல்துறையிலிருந்து ஒரு தன்னிச்சையான மத்திய நிறுவனத்திற்கு முதல் தகவல் அறிக்கையை மாற்ற வேண்டும் என்று உத்தரவிடக் கோரி மனுதாரரால் இந்த 'செயலுறுத்தும் நீதிப்பேராணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது – தீர்வு: 2018 ஆம் ஆண்டின் முதல் தகவல் அறிக்கை எண். 58 இன் படி பதிவு செய்யப்பட்ட குற்றம் குறித்த விசாரணை சிறப்பு புலனாய்வுக் குழுவால் நடத்தப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது – –வது எதிர்மனுதாரருக்குச் சொந்தமான அலைபேசிகள் விசாரணை அமைப்பால் கைப்பற்றப்படவில்லை என்று ஒரு கட்டத்தில்

வெளிப்படுத்தப்பட்ட அச்சம் கவனத்தில் கொள்ளப்பட்டு, அந்த அலைபேசிகள் விசாரணை அமைப்பின் வசம் கைப்பற்றப்படுவது உறுதி செய்யப்பட்டது – அந்த அலைபேசிகளிலிருந்து தரவும் மீட்க முயற்சித்த போது எதிர் மனுதாரர் எண் 7 தரவை மீட்டெடுக்க முடியும் என்பதை உறுதி செய்து ஒத்துழைப்பை வழங்கினார்–இருப்பினும், மனுதாரர் சார்பாக முழு தரவும் மீட்டெடுக்கப்படவில்லை என்று கூறப்பட்டது – இரண்டு அலைபேசிகளும் தடயவியல் பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டன – சில படங்கள் எதிர்மனுதாரர் எண் 7 ஆல் எடுக்கப்பட்டிருக்கலாம் அந்த தரவு தற்போது கிடைக்கவில்லை என்று மனுதாரர் பரிந்துரைத்தார்– இருப்பினும், ஐக்ளவுட்லிருந்து (iCloud) எடுக்கபட்டவை விசாரணை நிறுவனத்திடம் முழுமையாக கிடைத்தன – விசாரணை அதிகாரியின் அலைபேசி சேதமடைந்துள்ளது என்ற வாதம் ஒரு சாரமன்று, மனுதாரருக்கும் விசாரணை அதிகாரிக்கும் இடையிலான எந்தவொரு உரையாடலின் விவரங்களும் மனுதாரரின் அலைபேசி மூலமாகவும் மனுதாரராலேயே நிரூபிக்கப்படலாம் – இவ்வாறு, விசாரணை சரியாக செய்யப்படவில்லை என்பதை காட்டவோ அல்லது ஒரு குறிப்பிட்ட கோணத்தில் ஆராயத் தவறிவிட்டது என்பதைக் காட்டவோ கூடிய போதுமான சங்கதிகள் எதுவும் இல்லை – எனவே, இனி எதுவும் செய்ய வேண்டிய அவசியமில்லை – மனுதாரர் ஏதேனும் காணொலி (வீடியோ) அல்லது ஒலி சார்ந்த(ஆடியோ) பதிவுகள் இன்னும் தன்னிடம் இருந்தால், அதனை சிறப்பு புலனாய்வு அமைப்பிடமே ஒப்படைக்கலாம் என்று உத்தரவிடப்படுகிறது – சிறப்பு புலனாய்வு குழு

தாக்கல் செய்ய உள்ள துணை குற்றப்பத்திரிக்கையில் அந்த பகுதியை கையாள வேண்டுமா என்பதை பரிசீலிக்க சிறப்பு புலனாய்வு குழுவிற்கே விடப்பட்டுள்ளது.

புலன் விசாரணை :– விசாரணையை மத்திய நிறுவனத்திற்கு மாற்றுதல் – மனுதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் எதிர்மனுதாரர் எண். 7 குடும்பத்திடம் ரூ. 15 லட்சம் கேட்டு அழுத்தம் கொடுத்ததாகவும் எதிர்மனுதாரர் கொடுக்க தவறினால் எதிர்மனுதாரர் எண். 7 க்கு எதிராக கற்பழிப்பு மற்றும் பிற குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்வதாக அச்சுறுத்தப்பட்டதாக எதிர்மனுதாரரின் தாயார் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தார் – எதிர்மனுதாரர் எண். 7 இன் தாயார் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை தொடர்பான விசாரணையை ஒரு சுயாதீன மத்திய நிறுவனத்திற்கு மாற்ற உத்தரவிடக் கோரி மனுதாரர் செயலுறுத்தும் கட்டளை நீதிப்பேராணை தாக்கல் செய்துள்ளார். விசாரணை நிறுவனம் உடனடியாக அலைபேசி எண்களின் அழைப்பு விவர பதிவுகளை சேகரித்து, குற்றம் சாட்டப்பட்டவரின் இரண்டு அலைபேசிகளை பறிமுதல் செய்து, குற்றம் சாட்டப்பட்டவர் கற்பழிப்பு குற்றத்தைச் செய்ய அழைத்துச் சென்ற ஹோட்டலின் சிசிடிவி காட்சிகளை மீட்டெடுக்க வேண்டும்; மனுதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். தீர்வு:– எதிர்மனுதாரர் எண் 7 இன் தாயார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் படி பதிவு செய்யப்பட்ட குற்றத்தைப் பொறுத்தவரை, மனுதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது. மேலும்

இதனுடன் பிரிவு 438 குவிமுச இன் கீழ் விண்ணப்பமும் கையாளப்பட்டது – மனுதாரர் தாக்கல் செய்த குவிமுச பிரிவு 482 இன் கீழான விண்ணப்பம் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது – இதனால், மனுதாரர் நீதிமன்றத்தின் நடைமுறைகளை நாடினார் மற்றும் அவருக்குப் போதுமான பாதுகாப்பு வழங்கப்பட்டது– விசாரணையை வேறு எந்த நிறுவனத்திற்கும் மாற்ற எந்த காரணமும் இல்லை.

நீதிமன்ற அவமதிப்பு:– முதல் தகவல் அறிக்கை எண். 314, அதற்குப் பிறகு தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தில், எதிர்மனுதாரர் எண்.7 தனது மீது தாக்குதலை ஏற்பாடு செய்ததாகவும், அவர் ஒரு காரால் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு பொறுப்பானவர் என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டினார் – இருப்பினும், சிசிடிவி காட்சிகள் அவர் ஒரு காரால் தாக்கப்படவில்லை, ஆனால் ஒரு தெலா (ரிக்ஷா) மூலமாக தாக்கப்பட்டார் என்பதைக் காட்டியது, இது நீதிமன்றத்தில் அவர் சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் உள்ள குற்றச்சாட்டுகள் உண்மை இல்லை என்று முதல் தோற்றத்தை குறிக்கிறது– சத்தியப்பிரமாணத்தின் மீது தவறான வாக்குமூலம் கொடுப்பது இதச பிரிவு 181 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும் – அதே நேரத்தில் அரசு ஊழியர் தனது சட்டபூர்வமான அதிகாரத்தை மற்றொரு நபரை காயப்படுத்துவதற்கான நோக்கத்துடன் அவருக்கு தவறான தகவல்களை வழங்குவது இதச பிரிவு 182 இன் கீழ் தண்டனைக்குரியது. குவிமுச பிரிவு 195 (1) (a)(i) ன் படியான இந்த குற்றங்கள் மேற்கூறிய பிரிவில் கூறப்பட்டுள்ளபடி எழுத்துப்பூர்வ

முறையான முறையீட்டின் பேரில் மட்டுமே எந்தவொரு நீதிமன்றமும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியும் – இந்த சூழ்நிலைகளில், இந்த நீதிமன்றத்தின் அதிகாரத்தை தானாக பயன்படுத்தி மனுதாரருக்கு ஒரு அறிவிப்பு வழங்கப்பட வேண்டும் "ஏன் அவருக்கு எதிராக அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்றும் மற்றும் ஏன் பொருத்தமான வழிகாட்டுதல் குவிமுச பிரிவு 195 (1) (a) (i) இன் கீழ் ஏன் பிறப்பிக்கூடாது என்றும் – இந்த விவகாரத்தை ஒரு தன்னிச்சையான வழக்காக பதிவு செய்யுமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது – குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1860– பிரிவுகள் 181,182 – குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973 – பிரிவு 195(1)(a)(i).

புஷ்பாதேவி எம். ஜடியா எதிராக M.L. வாதவான் போன்றவை. **(1987) 3 எஸ். சி. சி 367: [1987] 3 எஸ். சி. ஆர் 46**; *சந்திர சசி எதிராக அனில் குமார் வர்மா* **(1995) 1 எஸ். சி. சி 421: [1994] 5 துணை எஸ். சி. ஆர் 465**; *K.D. ஷர்மா எதிராக ஸ்டீல் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட்* **(2008) 12 SCC 481: [2008] 10 எஸ். சி. ஆர் 454;** *தனஞ்சய் ஷர்மா எதிராக ஹரியானா மாநிலம் மற்றும் பிற* **(1995) 3 எஸ். சி. சி 757: [1995] 3 எஸ். சி. ஆர் 964– சார்ந்திருந்தது.**

<u>பார்வையிட்ட சட்ட முன்தீர்முடிவுகள் :</u>

[1987] 3 எஸ். சி. ஆர் 46 பத்தி 15 ஐ சார்ந்திருந்தது

[1994] 5 துணை

எஸ். சி. ஆர் 465 பத்தி 16 ஐ சார்ந்திருந்தது

[2008]10 எஸ்.சி.ஆர் 454 பத்தி 16 ஐ சார்ந்திருந்தது

[1995]3 எஸ்.சி.ஆர்964 பத்தி16 ஐ சார்ந்திருந்தது

குற்றவியல் அசல் அதிகாரவரம்பு: குற்றவியல் நீதிப்பேராணை மணு எண் 191/2018.

[இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ்]

அமன் லெகி, ஏ.எஸ்.ஜி., திருமதி சோனியா மாத்தூர், மூத்த வழக்கறிஞர், சுஷில் குமார் தூஃப்பே, செல்வி திவ்யா நாயர், அனுஜ் அகர்வால், புனீத் பதக், அவத் பிஹாரி கௌசிக், முகமது அகில், செல்வி சுஹாசினி சென் (பி. வி. பலராம் தாஸுக்காக) சுஹான் முகர்ஜி, செல்வி அஸ்தா ஷர்மா, செல்வி பிரஸ்துத் தல்வி, அமித் வர்மா, அபிஷேக் மஞ்சந்தா, செல்வி காஜல் தலால், நவீன் குமார், M/s. பி. எல். ஆர் சேம்பர்ஸ் அண்ட் கம்பெனி, மனோஜ் வி. ஜார்ஜ், முகமது இர்ஷாத் ஹனிஃப், செல்வி ஷில்பா லிசா ஜார்ஜ், ரிஸ்வான் அகமது, முஜாஹித் அகமது, செல்வி அக்ரிதி ஜெய், கே. பன்மேய், ஷிபாஸ் ஆர். தீன், ரெஞ்சித் வி. பிலிப், செல்வி பாவிகா, ஹேமந்த் சர்மா, செல்வி பாபிலா கே.கே., A.B.கௌசிக், அவத் பிஹாரி கௌசிக், டாக்டர் மோனிகா குசைன், செல்வி மன்பிரீத் கவுர் பல்லா, வழக்கறிஞர்கள். தரப்பினர்களுக்காக முன்னிலையாகினர்.

இந்த நீதிமன்றத்தின் உத்தரவை **மாண்புமிகு நீதியரசர் திரு.உதய உமேஷ் லலித்** அவர்கள் பிறப்பித்தார்:–

1. பின்வரும் வழிகாட்டுதல்களைக் கோரி மேலே பெயரிடப்பட்ட மனுதாரர் (இந்திய தண்டனைச் சட்டம், 1860 பிரிவு 228A –ன் படி,

மனுதாடரின் அடையாளம் வெளிப்படுத்தப்படவில்லை) இந்த நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்துள்ளார்:–

I.முதல் தகவல் அறிக்கை எண் 58/2018 பிரிவு 376,328,506 & 509 இதச 1860 ஆகியவற்றிலிருந்து எழும் விசாரணையை டெல்லி காவல்துறையிலிருந்து ஒரு தனிப்பட்ட மத்திய முகமைக்கு மாற்ற வேண்டும் என்ற செயலுத்தும் கட்டளை நீதிப்பேராணை மனு கோரி.

II. குற்றம் சாட்டப்பட்டவரை (எதிர் மனுதாரர் எண். 7) இடைநீக்கம் செய்யுமாறு மேற்கு வங்க மாநிலத்திற்கு மற்றும் அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை தொடங்க வேண்டி 'செயலுறுத்தும் பேராணை' வழியாக உத்தரவிடக் கோரப்படுகிறது. சுதந்திரமான மற்றும் நியாயமான புலன் விசாரணையை உறுதி செய்வதற்காக இந்த குற்றத்தின் சாட்சியின் மீது செல்வாக்கு செலுத்த வேண்டாம் என்று அவருக்கு ஆணையிடக் கோரப்படுகிறது.

III. மேற்கு வங்கத்தின் பசிர்ஹத் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட இதச பிரிவு 384,389,34 இன் கீழ் 03.06.2018 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை எண் 256/2018 இல் இருந்து எழும் விசாரணையை மத்திய முகைமைக்கு மாற்றவும், அதுவரை விசாரணைக்கு தடை விதிக்கவும் உத்தரவிடவும்.

IV. அலைபேசி எண்களின் அழைப்பு விவர பதிவுகளை (சி.டி.ஆர்) உடனடியாக சேகரித்து, குற்றம் சாட்டப்பட்டவர்களின் இரண்டு கைத் தொலைபேசிகளை பறிமுதல் செய்யுமாறு புலனாய்வு அமைப்புக்கு உத்தரவிடவும், லலித் ஹோட்டலின் 27.01.2018

முதல் 29.01.2018 வரையிலான வரவேற்பறை(லாபி), உணவகம் மற்றும் எதிரி மனுதாரரை அழைத்து சென்று வண்புணர்வு குற்றம் செய்த அறை எண் 2603 இன் சிசிடிவி காட்சிகளை மீட்டெடுக்கவும் உத்தரவிடக் கோரப்படுகிறது.

V. மனுதாரருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு வழங்க உத்தரவிடவும்.

VI. இந்த நீதிமன்றம் பொருத்தமானதாகவும் சரியானதாகவும் கருதும் மனுதாரருக்கான நீதியைப் பெறுவதற்கான வேறு ஏதேனும் உத்தரவு அல்லது வழிகாட்டுதல்கள்."

2. புதுடெல்லியின் காவல் நிலையத்தின் பராகம்பா சாலையில் மனுதாரர் தாக்கல் செய்த 2018 ஆம் ஆண்டின் முதல் தகவல் அறிக்கை எண். 58 ல் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பின்வருமாறு:

மனுதாரரும் எதிர்மனுதாரர் எண். 7ம் (ஒரு ஐபிஎஸ் அதிகாரி) முகநூல் வாயிலாக கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதன் மூலம் நண்பர்களாகி ஒருவருக்கொருவர் சந்திக்கத் தொடங்கினர். அவர்களுக்குள் திருமணம் குறித்த பேச்சுகள் இருந்தன. 28.01.2018 அன்று, எதிர்மனுதாரர் எண். 7 டெல்லிக்கு வந்து ஹோட்டல் லலிதில் தங்கியிருந்தார். மனுதாரர் 7–வது எதிர்மனுதாரரின் அறைக்குச் சென்றபோது, அவர் மனுதாரருக்கு சில சாக்லேட்டுகளைக் கொடுத்தார். அவர் சாக்லேட்டுகளை சாப்பிட்ட பிறகு தலைச்சுற்றல் ஏற்பட்டது. அவரது அந்தச் சூழ்நிலையைத் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, 7–வது

எதிர்மனுதாரர் அவரிடம் அத்துமீறி நடந்து கொண்டதுடன், அவருடன் உடலுறவு கொண்டார். அதன்பிறகு சிறிது நேரம், திருமணத்தின் அடுத்த கட்டத்திற்கு தங்கள் உறவை முன்னெடுத்துச் செல்ல இரு குடும்பங்களுக்கிடையே கலந்துரையாடல்கள் நடந்தன…. ஆனால் 10.02.2018 அன்று எதிர்மனுதாரர் எண். 7 திடீரென்று மனுதாரரிடம் தங்களுக்கு இடையே எந்த உறவும் இல்லை என்று கூறினார். தனது இக்கட்டான நிலையைப் பயன்படுத்தி 28.01.2018 அன்று தன்னுடன் வலுக்கட்டாயமாக உடலுறவு கொண்டதாகக் குற்றம் சாட்டி, 26.05.2018 அன்று இந்த முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

3. 03.06.2018 அன்று, 2018 ஆம் ஆண்டின் முதல் தகவல் அறிக்கை எண். 256 ஐ எதிர்மனுதாரர் எண். 7 இன் தாயார் பதிவு செய்தார். மனுதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் எதிர்மனுதாரர் எண். 7 இன் குடும்பத்திற்கு ரூ. 15 லட்சங்களை வழங்க அழுத்தம் கொடுத்ததாகவும், அவ்வாறு வழங்காவிடில் 7 வது எதிர்மனுதாரருக்கு எதிராக கற்பழிப்பு மற்றும் பிற குற்றவியல் வழக்குகளுடன் வழக்குகளைத் தாக்கல் செய்வதாக அவர்கள் மிரட்டியுள்ளனர். மனுவின் அழுத்தத்திற்கு அடிபணிந்து, மனுதாரரின் சகோதரருக்கு 04.02.2018 அன்று ரூ. 5 லட்சம் வழங்கப்பட்டது என்றும், மீதமுள்ள தொகையை மூன்று மாதங்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டது. முதல் தகவல் அறிக்கை இதனால் 384,389 உடன் இணைந்த 34 இதச(இந்திய தண்டனைச் சட்டம்,

1860) பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்ததாக இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டன.

4. தற்போதைய மனுதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு குவிமுச பிரிவு 438 (குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973) இன் கீழ் பாதுகாப்பு வழங்கப்பட்டது, இந்த பாதுகாப்பு இன்னும் தொடர்கிறது என்பதையும் குறிப்பிட வேண்டும் மற்றும் குவிமுச சட்டத்தின் பிரிவு 482 (குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973) இன் கீழ் ஒரு மனுவும் மனுதாரரால் முதல் தகவல் அறிக்கை எண். 256 ஐ ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. இந்த இரண்டு முதல் தகவல் அறிக்கையின் பின்னணியில் 7–வது எதிர்மனுதாரர் காவல் துறையைச் சேர்ந்தவர் என்பதால், தில்லி காவல்துறை நடத்தும் விசாரணை முறையானதாகவும் நியாயமானதாகவும் இருக்காது என்ற அச்சத்தை முன்வைத்து இந்த நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது. விசாரணை அமைப்பு, மனுதாரரின் வாக்குமூலத்தைப் பிரிவு 164–ன் கீழ் பதிவு செய்வதில் தாமதம் செய்ததாகவும், ஹோட்டல் லலித்தின் சிசிடிவி காட்சிகளைப் பெற எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றும் மனுதாரர் சில அம்சங்களைச் சுட்டிக்காட்டினார். இந்த சூழ்நிலையில், விசாரணையை டெல்லி காவல்துறையிலிருந்து ஒரு தனிப்பட்ட காவல் முகமைக்கு மாற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை செய்யப்பட்டது. மேலும், எதிர்மனுதாரர் எண் 7 இன் தாயார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மனுதாரர் மற்றும் அவரது

குடும்பத்தினரையும் வேண்டுமென்றே வழக்கில் சிக்க வைக்கும் முயற்சி என்று கூறப்பட்டது. மேலும் இந்த முதல் தகவல் அறிக்கை தொடர்பான விசாரணையை ஒரு தனிப்பட்ட முகமையிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரப்பட்டது.

6. 2018 ஆம் ஆண்டின் முதல் தகவல் அறிக்கை எண். 58 தொடர்பான விசாரணை 19.06.2018 அன்று டெல்லி காவல்துறையின் குற்றப்பிரிவுக்கு மாற்றப்பட்டது, அதன்பிறகு 2018 ஆகஸ்டில், மேலே குறிப்பிட்ட நிவாரணங்களைக் கோரி தற்போதைய இந்த நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

7. இந்த போரணை மனு அவ்வப்போது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது; மேலும் பின்வரும் முன்னேற்றங்களைக் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கலாம்.

(a) 23.07.2019 அன்று, விசாரணை முகமை சம்பந்தப்பட்ட ஹோட்டலில் இருந்து சிசிடிவி காட்சிகளை மீட்டெடுக்கவில்லை என்ற மனுதாரரின் வாதங்கள் பதிவு செய்யப்பட்டன. ஹோட்டலில் சிசிடிவி காட்சிகள் ஒரு மாதம் மட்டுமே சேமிக்கப்படும் என்றும், இந்தச் சம்பவம் நடந்து மூன்று மாதங்களுக்குப் பிறகே புகார் அளிக்கப்பட்டதால், அந்தக் காட்சிகளைப் பெற முடியவில்லை என்றும் விசாரணை அதிகாரி தெரிவித்தார். ஒரு கைத்தொலைபேசி விசாரணை அதிகாரியால் பறிமுதல் செய்யப்பட்டது; அவருக்கு சொந்தமான மற்ற கைத்தொலைபேசியில் எந்த ஆதாரங்கள் இல்லை என்றும், அது எதிர்மனுதாரர் எண் 7 க்கு திருப்பித் தரப்பட்டதாகவும் கூறப்பட்டது. இந்த சூழ்நிலையில், எதிர்மனுதாரர் எண் 7 இன் மற்ற

கைத் தொலைபேசியை மீண்டும் பறிமுதல் செய்யவும், இரண்டு கைத் தொலைபேசிகளையும் தடயவியல் பகுப்பாய்விற்கு அனுப்ப வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த விவகாரம் தொடர்பான விசாரணை விரைவில் நடத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது;

(b) உரிய விசாரணைக்குப் பின்னர் இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதாக 11.09.2019 அன்று தெரிவிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் எண் 7 இன் இரண்டாவது தொலைபேசியும் பறிமுதல் செய்யப்பட்டது;, நிபுணர்களின் கருத்துக்காக மெட்டாடேட்டாவைப் எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்பட்டது. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் எண். 7 இன் சமர்ப்பிப்புகள் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டன.

"இந்த இரண்டு தொலைபேசிகளிலிருந்தும் தரவு மீட்பு தொடர்பான விசாரணை முறையானது அல்ல என்றும் குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து எந்த ஒத்துழைப்பும் இல்லை என்றும் மூத்த வழக்கறிஞர் திருமதி ஐஸ்வர்யா பாட்டி சமர்ப்பித்தார்".

குறியீடு எண்ணை வழங்காததால் குற்றம் சாட்டப்பட்டவரின் ஒத்துழைப்பு இல்லாததால், கைத் தொலைபேசியை இயக்கவோ திறக்கவோ முடியவில்லை என்று குற்றப்பத்திரிகை எங்கும் பரிந்துரைக்கவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர்களின் மூத்த வழக்கறிஞர் திருமதி சோனியா

மாத்தூர் குறியீடு எண்ணை (எண். 220192) மிகவும் நியாயமாக வழங்கியுள்ளார் என்பதையும், இந்த குறியீடு எண் இரண்டு கைத் தொலைபேசிகளுக்கும் பொருந்தும் என்றும், இதன் உதவியுடன் கைத் தொலைபேசிகள் சாதரணமாக திறக்கப்படலாம் என்றும் கூறினார்".

(c) அக்டோபர் 21,2019 அன்று 18.10.2019 அன்று நடந்த ஒரு சம்பவத்தை முன்னிலைப்படுத்திய பின்னர் காவல்துறை பாதுகாப்பு கோரி மனுதாரர் 2019 ஆம் ஆண்டின் Crl.M.P. எண். 162386 தாக்கல் செய்தார். மேற்கூறிய சம்பவம் தொடர்பாக, மனுதாரர் தெற்கு தில்லி மாவட்டத்தில் உள்ள கோட்லா முபாரக் புர் காவல் நிலையத்தில் மு.த.அ எண். 314 ஐ பதிவு செய்தார்; அதில் அவர் சுமத்தியுள்ள முக்கியக் குற்றச்சாட்டுகள் வருமாறு:

"நான் டி.ஃபென்ஸ் காலனியில் இருந்து எனது வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தபோது "சிவப்பு விளக்கு எதிரே உள்ள ஐ.ஃபோன் கடைக்கு முன்னால் திடீரென்று ஒரு கார் பின்புறத்திலிருந்து வந்து மீது மோதியது. எனக்குக் காயம் ஏற்பட்டது, ஓட்டுநரைத் தடுக்க முயற்சித்தேன், ஆனால் அவர் அங்கிருந்து ஓடிவிட்டார். நான் காயமடைந்ததாலும், பாதுகாப்பற்ற உணர்வு ஏற்பட்டதாலும், 100 என்ற எண்ணுக்கு அழைத்து உதவி கோரினேன் மற்றும் அங்கிருந்து ஒரு ஆட்டோவை எடுத்தேன். நான் எனது இல்லத்தை அடைந்தேன். பி. சி. ஆர் காவல் வாகனம் என்னை எய்ம்ஸ் விபத்து சிகிச்சை மையத்திற்கு அழைத்துச் சென்றது. "நான்

உடனடியாக எஸ்ஐடிக்கு அழைப்பு விடுத்தேன் (குறிப்பு மு.த.அ எண் 0058/18 உடன் காவல் நிலைய பராகம்பா சாலை புது தில்லி, தேதி 26.05.2018) ஆனால் அவர்கள் எனது அழைப்புகளை எடுக்கவில்லை". இதற்காக சம்பந்தப்பட்ட டி. சி. பி க்கும் நான் அழைப்பு விடுத்ததுடன் வாட்ஸ்அப் செய்தியும் அனுப்பினேன்"

எதிர்மனுதாரர் எண் 7 தன்னைத் தாக்கியதாக மனுதாரருக்கு வலுவான அச்சம் இருப்பதாகவும் மு.த.அ –யும் கூறியது. கிடைக்கக்கூடிய சிசிடிவி காட்சிகளை பறிமுதல் செய்ய வேண்டும் என்று மேலும் கூறப்பட்டது.

இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"மனுதாரரின் வாழ்க்கை இருண்டு போயுள்ளது என்பதும், ஒரு ஐபிஎஸ் அதிகாரியாக இருந்த குற்றம் சாட்டப்பட்டவர், மனுதாரரை தனது செயல்களுக்கு அடிபணியச் செய்ய அனைத்து வழிகளையும் பின்பற்றி வருவதால், அவரது உயிருக்கு அச்சுறுத்தலும் ரகசியக் கண்காணிப்பும் இருந்து வருகிறது என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆகவே, இந்த மாண்புமிகு நீதிமன்றத்தால் போதுமான பாதுகாப்பும் நடவடிக்கைகளும் வழங்கப்படாவிட்டால், குற்றம் சாட்டப்பட்ட ஐபிஎஸ் அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் தனது வாழ்க்கை முடிவுக்கு வரும் என்று மனுதாரர் சமர்ப்பிக்கிறார்."

(d) 24.10.2019 அன்று, 11.09.2019 அன்று வெளியிடப்பட்ட உத்தரவுகளின்படி, எதிர்மனுதாரர் எண். 7 இன் இரண்டாவது கைத் தொலைப்பேசியிலிருந்தும், விசாரணை அதிகாரியின் கைத் தொலைப்பேசியிலிருந்தும் தரவை மீட்டெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த உத்தரவு மேலும் பதிவுசெய்தது யாதெனில்:

"கற்றறிந்த வழக்கறிஞரின் கூற்றுப்படி, குற்றம் சாட்டப்பட்டவரின் அதிகாரப்பூர்வ கைத் தொலைப்பேசியிலிருந்து தரவை மீட்டெடுக்க முடியும். இருப்பினும், குற்றம் சாட்டப்பட்டவரின் தனிப்பட்ட கைத் தொலைப்பேசி மற்றும் புலனாய்வாளரின் கைத்தொலைப்பேசி குறித்து, இரண்டு கைத்தொலைப்பேசியும் சேதமடைந்ததால் எந்த தரவையும் மீட்டெடுக்க முடியவில்லை. எனவே, இந்த வழக்கு சி.பி.ஐ. சி.எஃப்.எஸ்.எல்–க்கு அனுப்பப்பட்டது.

இந்த கட்டத்தில், எதிர்மனுதாரர் எண் 7 சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் திருமதி சோனியா மாத்தூர், அவருக்குச் சொந்தமான ஐ–க்ளவுட் ஐடி மற்றும் கைத்தொலைப்பேசியின் கடவுச்சொல் உள்ளிட்ட தொடர்புடைய விவரங்கள் எதிர்மனுதாரர் எண் 7 மூலம் சிபிஐ சிஎஃப்எஸ்எல்–க்கு தெரிவிக்கப்பட்டதாக சமர்ப்பித்தார்.

இதன் விளைவாக, தொடர்புடைய ஐ–க்ளவுட்(iCloud) தரவு இப்போது எதிர்மனுதாரர் எண்.7 இன் இரண்டு

கைத்தொலைப்பேசியிலிருந்தும் சிபிஐ சிஎஃப்எஸ்எல் மூலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

அதாவது அதிகாரப்பூர்வ கைத்தொலைப்பேசி மற்றும் தனிப்பட்ட கைத்தொலைப்பேசி. இருப்பினும், விசாரணை அதிகாரிக்கு சொந்தமான கைத்தொலைப்பேசியிலிருந்து எந்த தரவையும் மீட்டெடுக்க முடியவில்லை, ஏனெனில் அந்த கைத்தொலைப்பேசி ஐபோன் அல்ல என்பதால், அதில் ஐ–க்ளவுட் போன்ற தரவு சேமிப்பு வசதி ஏதும் இல்லை என்பதே இதற்குக் காரணமாகும்.

எனவே, முழு விசாரணை நடவடிக்கைகளின் விளைவாக மீட்டெடுக்கப்பட்ட தகவல்கள் என்ன என்பதை சரியாக வெளிப்படுத்தாமல் இந்த விவரங்கள் அனைத்தையும் குறிப்பிடும் பொருத்தமான பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு சம்பந்தப்பட்ட விசாரணை அதிகாரியை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

நீதிப்பேராணை மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் மனோஜ் வி. ஜார்ஜ், 17.10.2019 அன்று சமர்ப்பித்தது யாதெனில், மனுதாரர் ஒரு வாகனத்தால் தாக்கப்பட்டார், இதன் விளைவாக அவர் காயமுற்று புது தில்லியில் உள்ள எய்ம்ஸ் விபத்துச் சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்றார் என்றும், அதன் பிறகு கோட்லா முபாரக் பூர் காவல் நிலையத்தில் உரிய புகார் அளிக்கப்பட்டது என்றும் தெரிவித்தார். தெற்கு தில்லி, கோட்லா முபாரக் பூர் காவல் நிலையத்தில் 18.10.2019 அன்று பதிவு

செய்யப்பட்ட மு.த.அ எண். 314 மற்றும் மருத்துவ ஆவணங்கள் ஆகியவை குற்றவியல் பல்வகை மனு எண். 162386/2019– உடன் நீதிமன்றப் பதிவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பதாகும்.

புகார்களின் தன்மை மற்றும் மனுதாரர் அனுபவித்த காயங்களைக் கருத்தில் கொண்டு, எதிர்மனுதாரர்கள் தாங்களாகவே, மனுதாரருக்கு ஒரு பாதுகாப்பு அதிகாரியை நியமிப்பதன் மூலம் மனுதாரருக்குக் காவல்துறை பாதுகாப்பை வழங்கியுள்ளனர் என்று வழக்கறிஞர் செல்வி சுஹாசினி சென் தெரிவித்தார். முதல் தகவல் அறிக்கை எண். 314 குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும், இது குறித்து, அடுத்த விசாரணை தேதிக்கு முன்னர் தகுந்த பதில் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் சமர்ப்பித்தார்.

(e) அதன்பின்னர், 26.05.2018 தேதியிட்ட மு.த.அ தொடர்பான விசாரணை நிலை குறித்த அறிக்கையை புது தில்லி குற்றப்பிரிவு விசாரணை அதிகாரி 26.11.2019 அன்று தாக்கல் செய்தார்; அதில், 7–வது எதிர்மனுதாரரின் கைத்தொலைபேசிகளிலிருந்து தரவுகள் மீட்டெடுக்கப்பட்ட பிறகு, ஒரு கூடுதல் குற்றப்பத்திரிகை தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், அனுமதி பெற்ற பிறகு அது தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதே தேதியில், தில்லி டி.ஃபென்ஸ் காலனி துணைப் பிரிவு உதவி போலீஸ் கமிஷனர் மற்றொரு நிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்; அதில், மனுதாரர் மீது கார் மோதியதாகக் கூறப்படும் இடத்திலிருந்த சிசிடிவி

காட்சிகளை ஆய்வு செய்ததில், அப்படி ஒரு சம்பவம் உண்மையில் நடக்கவில்லை என்று காட்டுகிறது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளது:

"13. அவ்வாறு பெறப்பட்ட சிசிடிவி காட்சிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. 17.10.19 அன்று இரவு சுமார் 8.52 மணியளவில் எடுக்கப்பட்ட சிசிடிவி காட்சியில், மனுதாரர்/புகார்தாரர் அந்தச் சம்பவ இடத்தில் ஒரு ஆட்டோவை/TSR ஐ எடுக்க முயன்றபோது, ஒரு சிறுவன் ஓட்டி வந்த தெலா அவரது இடது காலில் உரசுவது தெரிகிறது. புகார்தாரர் அந்த தெலாவைத் திரும்பிப் பார்த்துவிட்டு, பின்னர் அங்கிருந்து நகர்ந்து செல்வது அந்தப் பதிவில் தெரிகிறது; அவர் அந்தச் சிறுவனை நிறுத்த எந்த முயற்சியும் செய்யவில்லை. தான் ஒரு காரால் இடிக்கப்பட்டதாகவும், அந்த ஓட்டுநரை நிறுத்த முயன்றதாகவும் புகார்தாரர் கூறியது போன்ற எந்தவொரு சம்பவமும் சிசிடிவி காட்சியில் வெளிப்படவில்லை. மாறாக, அவர் அந்தச் சம்பவ இடத்திலிருந்து சாதாரணமாக நடந்து செல்வது பதிவாகியுள்ளது. (இதற்கான சிசிடிவி காட்சிகளின் புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.)

14. நிகழ்விட விசாரணை நடத்தப்பட்டது, புகார்தாரர்/மனுதாரர் குற்றம் சாட்டியபடி நான்கு சக்கர வாகனம் (குற்றத்தில் சம்பந்தப்பட்ட வாகனம்) குறித்து புகார்தாரரின் பதிவை உறுதிப்படுத்த முடியும்படி எந்த சாட்சியையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

15. இந்த வழக்கில் இதுவரை நடத்தப்பட்ட விசாரணையின்படி, மனுதாரர்/புகார்தாரர் குறிப்பிட்ட அதே நேரம் மற்றும் அதே இடத்தில், அவர் ஒரு "தெலா" மூலமே உராய்ந்து காயப்பட்டார் என்பது வெளிப்படுகிறது.

16. கிடைக்கக்கூடிய சிசிடிவி காட்சிகளின்படி, புகார் அளித்தவர் புதுடெல்லியின் கோட்லா முபாரக் புர், குருத்வாரா சௌக் அருகே ஒரு தெலாவால் சுமார் 8.52 p.m. தேதி 17.10.2019 தாக்கப்பட்டார். அவள் தங்கியிருந்த இடமான இந்திரா நிகேதன் பணிப்பெண்கள் விடுதி, சரோஜினி நகர், புது தில்லியில் இருந்து 9.00 p.m. மற்றும் 9.07 p.m. –க்கு காவல்துறை கட்டுப்பாட்டு அறைக்கு (பிசிஆர்) அழைப்புகளைச் செய்தார். அவர் புதுடெல்லியின் எய்ம்ஸில் உள்ள ஜெய் பிரகாஷ் நாராயண் அபெக்ஸ் விபத்து சிகிச்சை மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார், அங்கு அவர் சுமார் 9.56 p.m மணிக்கு பரிசோதிக்கப்பட்டார். அவர் சுமார் 9.24 p.m மணிக்கு பி. சி. ஆர் ஊழியர்களுடன் புதுடெல்லியின் எய்ம்ஸ், ஜெய் பிரகாஷ் நாராயண் அபெக்ஸ் விபத்து சிகிச்சை மையத்திற்குள் நுழைந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த அழைப்பு முதலில் சரோஜினி நகர் காவல் நிலையத்திற்கும், பின்னர் காவல் நிலைய பாதுகாப்பு காலனிக்கும், இறுதியாக புதுதில்லியில் உள்ள கோட்லா முபாரக் பூர் காவல் நிலையத்திற்கும் அனுப்பப்பட்டது. விசாரணையின் விவரங்கள் பத்தி 12 முதல் 15 வரை குறிப்பிடப்பட்டுள்ளன."

(f) இதன் விளைவாக, அடுத்த தேதி அதாவது 27.11.2019 அன்று மனுதாரருக்கும் அவரது வழக்கறிஞருக்கும் சிசிடிவி காட்சிகளைப் பார்க்க உரிமை வழங்கப்பட்டது, மேலும் இந்த விவகாரம் ஒத்திவைக்கப்பட்டது.

(g) சிசிடிவி காட்சிகளைப் பார்க்கும் உரிமையைப் பெற்ற பிறகு, மனுதாரர் 03.12.2019 அன்று நிலை அறிக்கைக்கு பின்வருமாறு பதிலளித்தார்:–

> "8. சிசிடிவி பதிவில் 12 நிமிடம் 36 வினாடிகளில் (12:36) ஒரு ஆட்டோ ரிக்ஷா ஒரு சிறுவன் ஓட்டி வந்த முச்சக்கர வண்டியை (Tricycle) சுற்றி வளைத்து, தன்னைத் கீழே தள்ள வைத்ததும், அதைத் தொடர்ந்து சில வினாடிகளிலேயே கதவுகள் மூடப்பட்ட நிலையில் ஒரு கார் அங்கே தோன்றுவதும், இது ஒரு சிலரின் உள்நோக்கத்துடன் திட்டமிட்டு நடத்தப்பட்ட சம்பவங்களின் சங்கிலித் தொடர் என்ற பலமான சந்தேகத்தை மனுதாரரின் மனதில் எழுப்பியுள்ளது. காயத்தால் ரத்தப்போக்குடன் அவதிப்பட்டுக் கொண்டிருந்த மனுதாரர், சந்தேகத்திற்குரிய கார் பற்றி குறிப்பிடாமல் ஒரு முச்சக்கர வண்டிதான் தன் மீது மோதியது என்று காவல்துறையிடம் கூறினால், அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டார்கள் என்றும், ஒரு சிறுவன் ஓட்டி வந்த முச்சக்கர வண்டி மோதியது என்று கூறி

தனது புகாரைத் தள்ளுபடி செய்துவிடுவார்கள் என்றும் உணர்ந்தார்.

9. மனுதாரருக்கு உடனடி மருத்துவ கவனிப்பு தேவைப்பட்டது. ஒரு கார் தன்னைத் தாக்க பின்புறத்திலிருந்து வந்ததாகக் கூறியது, இந்த நோக்கத்துடன் மட்டுமே. தள்ளுவண்டி (பெட்டி பொருத்தப்பட்ட முச்சக்கர தள்ளுவண்டி) மோதிய 28 வினாடிகளுக்குப் பிறகுதான் அந்தக் கார் அந்த இடத்திற்கு வந்துள்ளது என்பது இப்போது (சிசிடிவி மூலம்) தெளிவாகத் தெரிந்தாலும், மூன்று சக்கர தள்ளுவண்டியே தன்னை மோதியது என்பது தெரிகிறது.

ஒரு ஆட்டோ ரிக்ஷா திடீரெனத் தன்னைச் சுற்றி வளைத்து வெடுக்கெனத் திசை மாறுவதும், அதே சமயம் ஒரு சிறுவன் அந்தச் சந்திப்பிற்குள் புகுந்து சரியாகத் தன் பின்னால் வந்து மோதுவதும், கீழே விழுந்த தவிப்பிலுள்ள பாதசாரியைத் தேடி வருவது போல ஒரு கார் அல்லது வேன் அந்த இடத்தில் தோன்றுவதும் என இந்தச் சாலை விபத்தில் அரங்கேறிய சங்கிலித் தொடர் நிகழ்வுகள், இதில் ஏதோ ஒரு சதித் திட்டம் இருக்கக்கூடும் என்ற மனுதாரரின் அச்சத்தை உறுதிப்படுத்துகின்றன.

(h) மனுதாரர் மற்ற நிலை அறிக்கைக்கு ஒரு பதிலும் தாக்கல் செய்தார். மற்றவற்றுடன் எதிர்மனுதாரர் எண்.7 பணியில் இருப்பது நியாயமான விசாரணையை பாதிக்கும்.

8. மேற்கூறிய பின்னணி மற்றும் பதிவுகளில் உள்ள சூழ்நிலைகளில், இது கற்றறிந்த கூடுதல் உதவி தலைமை வழக்கறிஞரால் சமர்ப்பிக்கப்பட்டது:–

(i) மனுதாரரின் முதல் தகவல் அறிக்கை படி பதிவு செய்யப்பட்ட குற்றம் தொடர்பான புலன் விசாரணை, உதவி காவல் ஆய்வாளர் (ஏ. சி. பி) ஸ்வேதா சிங் சவுகான் தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நியாயமாக நடத்தப்பட்டது. உரிய விசாரணைக்குப் பிறகு, குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது; விசாரணை அமைப்பால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, எனவே தற்போதைய நீதிப்பேராணை மனுவில் மேலும் எதுவும் செய்யத் தேவையில்லை.

(ii) ஒரு கார் தன் மீது மோதியதாக மனுதாரர் கூறிய குற்றச்சாட்டுகளும், அத்தகைய சம்பவத்திற்கு எதிர்மனுதாரர் எண் 7 தான் காரணமாக இருந்தார் என்ற கருத்தும் முற்றிலும் நிலை நிற்க தக்கதல்ல. உண்மையில் அங்கே கார் எதுவும் மோதவில்லை; மாறாக ஒரு முச்சக்கர வண்டியில் பொருத்தப்பட்ட *தள்ளுவண்டி* (*தெலா*) மட்டுமே மனுதாரர் மீது லேசாக உரசிச் சென்றது. இருப்பினும், இந்தச் சம்பவத்தின் பின்னணியில் 7–வது எதிர்மனுதாரர் தான் இருந்தார் என்பதைக் காட்டுவதற்காக, மனுதாரர் வேண்டுமென்றே

இப்பிரச்சினையைப் பெரிதுபடுத்தினார்.

(iii) மனுதாரரின் சொந்த வாக்குமூலத்தின் படியே, தன்னை ஒரு கார் மோதவில்லை, ஒரு தள்ளுவண்டிதான் (*தெலா*) மோதியது என்பது அவருக்குத் தெரிந்திருந்தது; ஆனால் தள்ளுவண்டி மோதியது என்று கூறினால் அது ஒரு சிறிய விபத்து எனக் கூறித் நிராகரிக்கப்படலாம் என்று அவர் நினைத்ததால், உண்மையை நேர்மையாகவும் சரியாகவும் அவர் தெரிவிக்கவில்லை. மேலும், மனுதாரர் அத்தகைய சிறிய மற்றும் தீங்கற்ற சம்பவத்தைப் பயன்படுத்தி எதிர்மனுதாரர் எண். 7 க்கு எதிராக குற்றம் சாட்ட விரும்பினார்.

9. மறுபுறம், மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞரான மனோஜ் ஜார்ஜ் பின்வருமாறு சமர்ப்பித்தார்.

(i) எதிர்மனுதாரர் எண் 7 காவல்துறையைச் சேர்ந்தவர் என்பதால், மனுதாரர் அளித்த முதல் தகவல் அறிக்கை படியான குற்றம் தொடர்பான புலன் விசாரணை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்தப்படாது என்ற திட்டவட்டமான அச்சம் இருந்தது;

(ii) 7–வது எதிர்மனுதாரரின் தாயார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை படி பதிவு செய்யப்பட்ட குற்றம், காவல் அதிகாரியான 7–வது எதிர்மனுதாரர் தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதற்கான ஒரு அறிகுறியாகும்;

(iii) மனுதாரரிடமுள்ள சில காணொலி (வீடியோ) அல்லது ஒலி சார்ந்த(ஆடியோ) பதிவுகள் விசாரணை நடத்தும்போது கவனிக்கப்படவில்லை.

(iv) எதிர்மனுதாரர் எண் 7 இன் இரண்டு கைத்தொலைபேசிகளிலிருந்தும் முழுமையான தரவு மீட்கப்படவில்லை, அதே நேரத்தில் புலனாய்வாளரின் கைத்தொலைபேசி முற்றிலும் சேதமடைந்துள்ளது, இதன் விளைவாக புலனாய்வாளரின் கைத்தொலைபேசியிலிருந்து எந்த தரவையும் மீட்டெடுக்க முடியவில்லை; மற்றும்

(v) மனுதாரர் ஒரு தெலாவால் தாக்கப்பட்ட உடனேயே, அவர் அந்த இடத்திற்கு அருகிலேயே ஒரு காரை பார்த்தார், எனவேதான் இது யாரோ ஒருவரால் திட்டமிட்டுத் தன் மீது நடத்தப்பட்ட முயற்சி என்ற அச்சம் அவருக்கு ஏற்பட்டது.

10. மனுதாரர் அளித்த 2018 ஆம் ஆண்டின் முதல் தகவல் அறிக்கை எண். 58 இன் படி பதிவு செய்யப்பட்ட குற்றம் குறித்த விசாரணை ஏ.சி.பி செல்வி ஸ்வேதா திவாரி சிங் தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழுவால் நடத்தப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் எண். 7 க்கு சொந்தமான கைத்தொலைபேசி காவல்துறையினரின் வசம் எடுக்கப்படவில்லை என்று ஒரு கட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அச்சத்தை இந்த நீதிமன்றம் கவனித்து, மற்றும் அந்த கைத்தொலைபேசிகள் விசாரணை அமைப்பின் வசம் இருக்கும் என்பது உறுதி செய்யப்பட்டது. அந்த கைத்தொலைபேசிகளிலிருந்து தரவுகளையும் மீட்க முயன்றனர். மேலும் தரவை மீட்டெடுக்க முடியும் என்பதை உறுதி செய்வதில் எதிர்மனுதாரர் எண். 7 ஒத்துழைப்பை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், மனுதாரர் சார்பாக வலியுறுத்தப்படுவது

முழுமையான தரவு மீட்டெடுக்கப்படவில்லை என்பதாகும். இரண்டு அலைபேசிகளும் தடயவியல் பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டன.7–வது எதிர்மனுதாரர் சில புகைப்படங்களை எடுத்திருக்கலாம் என்றும், அந்தத் தரவுகள் தற்போது கிடைக்கவில்லை என்றும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும்,ஐ–க்ளவுட்டில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட அனைத்துத் தரவுகளும் விசாரணை அமைப்பிடம் முழுமையாக உள்ளன. எந்தவொரு சந்தர்ப்பத்திலும், பல்வேறு கட்டங்களில் மனுதாரருக்கும் எதிர்மனுதாரர் எண் 7 க்கும் இடையில் பரிமாற்றங்கள் மற்றும் உரையாடல்கள் நடந்தன என்பதை தரவு சுட்டிக்காட்டுகிறது. ஆனால் அந்தத் துரதிர்ஷ்டவசமான இரவில் 7–வது எதிர்மனுதாரர் மனுதாரரைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டார் என்ற அடிப்படை வாதத்தைப் பொருத்தமான கட்டத்தில் விரிவாக ஆராய வேண்டியுள்ளது. விசாரணை அதிகாரியின் மொபைல் போன் சேதமடைந்துவிட்டது என்ற வாதம், இந்த வழக்கிற்குப் பெரிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல ஏனெனில், மனுதாரருக்கும் விசாரணை அதிகாரிக்கும் இடையே நடந்த உரையாடல்களின் விவரங்களை, மனுதாரரின் சொந்த கைத்தொலைபேசி மூலமாகவே நிரூபிக்க முடியும். எனவே, விசாரணை சரியாக நடத்தப்படவில்லை என்பதை காட்டவோ அல்லது ஒரு குறிப்பிட்ட கோணத்தில் விசாரிக்கத் தவறிவிட்டது என்பதைக் காட்டுவதற்குப் போதுமான ஆதாரங்கள் எதுவும் இல்லை. எங்களது ஆழமான பரிசீலனைக்குப் பிறகு, இந்த விவகாரத்தில் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை என்று நாங்கள் கருதுகிறோம். இந்த

கட்டத்தில், எந்தவொரு காணொலி அல்லது ஒலி சார்ந்த பதிவுகள் இருந்தால், அவை இன்று முதல் இரண்டு நாட்களுக்குள் சிறப்பு புலனாய்வுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு, தாக்கல் செய்யப்படவிருக்கும் துணை குற்றப்பத்திரிகையில், அந்த குறிப்பிட்ட விவகாரங்கள் கையாளப்பட வேண்டுமா என்பது குறித்துப் பரிசீலிக்கும் பொறுப்பு சிறப்புக் புலனாய்வுக் குழுவிடமே விடப்படுகிறது.

11. எதிர்மனுதாரர் எண் 7 இன் தாயார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் படி பதிவு செய்யப்பட்ட குற்றத்தைப் பொறுத்தவரை, மனுதாரர் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது மற்றும் குவிமுச பிரிவு 438 (குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973) –ன் கீழான மனு ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டது. (குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973) பிரிவு 482 இன் கீழ் மனுதாரர் தாக்கல் செய்த மனு தற்போது உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே, மனுதாரர் நீதிமன்ற நடைமுறைகளை முறையாகப் பயன்படுத்தி வருகிறார் என்பதும், மனுதாரருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் போதுமான பாதுகாப்பு வழங்கப்படுகிறது என்பதும் தெளிவாகிறது. எனவே, எதிர்மனுதாரர் எண். 7 இன் தாயார் அளித்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் தற்போது நிலுவையில் உள்ள இந்த வழக்கை வேறு எந்த முகைமைக்கும் மாற்றவோ அல்லது விசாரணையை ஒப்படைக்கவோ எந்தக் காரணமும் எங்களுக்குத் தெரியவில்லை.

12. மேற்கூறிய சூழ்நிலைகளில், மேற்கூறிய இரண்டு முதல் தகவல் அறிக்கைகள் மீதான விசாரணையும், இந்த கட்டத்தில், எந்த மத்திய புலனாய்வு அமைப்பிடமும் ஒப்படைக்கப்படுவதற்கான எந்த காரணத்தையும் நாங்கள் காணவில்லை. இந்த கட்டத்தில் நாம் சொல்லக்கூடியது என்னவென்றால், மனுதாரர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் படி, பதிவு செய்யப்பட்ட குற்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தால் சட்டத்தின்படி மற்றும் தகுதிகளின் அடிப்படையில் மற்றும் பரிசீலிக்கப்படும்.

13. இறுதியாக, மனுதாரர் தாக்கல் செய்த எஃப்.ஐ.ஆர் (FIR) மீதான விசாரணை நியாயமான முறையில் நடைபெறுவதை உறுதி செய்யும் நோக்கத்தில்தான் இந்த வழக்கை இந்த நீதிமன்றம் பரிசீலித்தது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். எனவே, இந்த மனுவின் போது நாங்கள் தெரிவித்த கருத்துகளோ அல்லது வழங்கிய உத்தரவுகளோ, இந்த வழக்கின் தகுதி குறித்தோ அல்லது விசாரணையின் தரம் குறித்தோ தெரிவிக்கப்பட்ட முடிவாகக் கருதப்படக்கூடாது. இந்த வழக்கினை அதன் தகுதிகள் மற்றும் சட்டத்தின்படி பரிசீலிக்க வேண்டும்.

14. நீதிப்பேராணை மனு நிலுவையில் இருந்தபோது ஏற்பட்ட முன்னேற்றங்களை இப்போது நாம் குறிப்பிடலாம். இதில் முதல் தகவல் அறிக்கை எண். 314, மற்றும் அதன் பின்னர் வழங்கப்பட்ட மனுக்களிலும், 17.10.2019 அன்று நடந்த சம்பவத்திற்கு எதிர்மனுதாரர் எண். 7 காரணம் என்று மறைமுகமாக ஒரு குற்றச்சாட்டு உறுதியாக

முன்வைக்கப்பட்டது. மனுதாரர் ஒரு காரால் தாக்கப்பட்டதாகவும், எதிர்மனுதாரர் எண் 7 இந்த சம்பவத்தின் பின்னணியில் இருக்கிறார் என்றும் மனுதாரர் மிகத் தெளிவாகத் தனது சந்தேகத்தைத் தெரிவித்திருந்தார். ஆனால் இப்போது தெரியவந்துள்ள உண்மைகளின்படி, அவர் காரால் மோதப்படவில்லை, ஒரு தள்ளுவண்டியால் (*தெலா*) தான் மோதப்பட்டார், இதிலிருந்து இந்த நீதிமன்றத்தின் முன் அவர் சத்தியப்பிரமாணம் செய்த அறிக்கையில் உள்ள குற்றச்சாட்டுகள் *முதல்நோக்கிலே* உண்மை இல்லை என்பதைக் குறிக்கிறது.

15. சத்தியப்பிரமாணத்தின் மீது தவறான வாக்குமூலம் அளிப்பது இதச பிரிவு 181 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். அதே நேரத்தில் அரசு ஊழியர் தனது சட்டபூர்வமான அதிகாரத்தைப் பயன்படுத்தி மற்றொரு நபரை காயப்படுத்தும் நோக்கத்துடன் தவறான தகவல்களை வழங்குவது இதச (இந்திய தண்டனைச் சட்டம், 1860) பிரிவு 182 இன் கீழ் தண்டனைக்குரியது. குவிமுச (குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973) பிரிவு 195 (1) (a) (i) இன் அடிப்படையில் குற்றங்களை எந்தவொரு நீதிமன்றமும் இந்த பிரிவில் கூறப்பட்டுள்ளபடி முறையான எழுத்துப்பூர்வமாக முறையீட்டின் பேரில் மட்டுமே விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியும். குவிமுச (குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973) பிரிவு 195 (1) (b) (i) இன் கீழ் வரும் விடயங்களைப் பொறுத்தவரை, ***புஷ்பாதேவி எம். ஜாதியா எதிராக எம்.ல.வாதவன் முதலியோர்*** [(1987) 3 எஸ்.சி.சி 367] வழக்கின் தீர்ப்பின்படி, குற்றச்சாட்டுகள் உண்மை என முதல்

நோக்கில் இந்த நீதிமன்றம் திருப்தியடைந்த பின்னரே வழக்கைத் தொடர உத்தரவிடப்பட்டது.

16. ***சந்திர சாஷி எதிர் அனில் குமார் வர்மா*** [(1995) 1 எஸ்.சி.சி 421] வழக்கில், நீதியின் நிர்வாகத்தில் தலையிட்டு நீதிமன்றத்தை ஏமாற்ற முயற்சிக்கும் ஒரு நபர், நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்கு உள்ளாவார் என்றும் இந்த நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வழக்கில், திருமண விவகாரம் சார்ந்த வழக்கு நடவடிக்கைகளை மாற்றக் கோரி தனது மனைவியின் கோரிக்கையை எதிர்க்க ஒரு புனையப்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்த ஒரு கணவர் நீதிமன்ற அவமதிப்பு குற்றவாளி எனக் கண்டறியப்பட்டு இரண்டு வார சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். பின்வருமாறு கவனிக்கப்படுவது யாதெனில்:–

> "1. நீதி நிர்வாகத்தின் போக்கானது இன்றும் தூய்மையாக இருக்க வேண்டும். அப்போதுதான் நீதிமன்றச் சூழலின் அந்தப் புனிதத்தன்மை, அரசின் மற்ற அனைத்து அங்கங்களுக்கும் வலிமையை சேர்க்கும். எனவே, நீதிமன்றத்தின் சூழலின் விழுமியத்தை பேண நீதித்துறையை மாசுபடுத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்; அப்போதுதான், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் திருப்தி அளிக்கும் வகையில், நீதிமன்றத்தால் நேர்மையான முறையில் நீதியை வழங்க முடியும்.
>
> 2. மோசடியை நாடும் எவரும், நீதித்துறை நடவடிக்கைகளின் போக்கை திசைதிருப்புகிறார்கள் அல்லது மறைமுக நோக்கத்துடன் ஏதாவது செய்வது என்பது நீதியின் நிர்வாகத்தில்

தலையிடுவதற்கு சமம். இதுபோன்ற நபர்கள் சட்டப்படி முறையான முறையில் கையாளப்பட வேண்டும். அவர்கள் செய்த தவறுக்காக அவர்களைத் தண்டிப்பது மட்டுமல்லாமல், நீதியின் நிர்வாக அமைப்பில் மக்களின் நம்பிக்கையை குலைக்கும் இதே போன்ற செயல்களில் ஈடுபடாமல் தடுப்பதற்கான ஒரு எச்சரிக்கையாகவும் அமையும்.

14. நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்துடனோ அல்லது மோசடி செய்யும் எண்ணத்துடனோ ஒரு தகவலை வெளியிடுவது என்பது நீதி நிர்வாகத்தில் குறுக்கிடுவதாகும் என்பதால் அது நீதிமன்ற அவமதிப்புக் குற்றமாகவே கருதப்படும் என்பதுதான் தற்போதைய சட்ட நிலைப்பாடாகும். அது, எந்த சந்தர்ப்பத்திலும் அதில் தலையிட முனைகிறது. மேற்கூறிய குற்ற எண்ணத்துடன் புனையப்பட்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டால் இது நிச்சயமாக அவ்வாறு அவமதிப்பிற்கு உட்பட்டதாகும்.

தற்போதுள்ள இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட புனையப்பட்ட ஆவணம் வெளிப்படையாக நீதிமன்றத்தை ஏமாற்றுவதாக இருந்தது. மேலும் மோசடி செய்வதற்கான நோக்கம் இதில் தெளிவாகத் தெரிகிறது. எனவே, அனில் குமார் என்பவர் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தைச் செய்தவராகக் கருதப்படுகிறார்.

கே.டி.ஷர்மா எதிராக ஸ்டீல் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட் மற்றும் பிறவற்றில் [(2008) 12 எஸ்.சி.சி 481] என்ற வழக்கில் கவனிக்கப்பட்டது:–

"39. கென்சிங்டன் வருமான வரி வணிகவியல்[(1917) 1 KB 486 : 86 LJKB 257: 116 LT 136 (CA)] இல் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள முதன்மையான நோக்கம் மனதில் வைத்திருந்தால்,உண்மைகளை வெளிப்படையாகவும் முழுமையாகவும் கூறாத ஒரு மனுதாரர் "கரைபடிந்த கைகளில் நீதிமன்றத்தின் பேராணையை பெற முடியாது. முக்கியமான உண்மைகளை மறைப்பதோ அல்லது ஒளித்து வைப்பதோ ஒருபோதும் முறையான வாதத் திறமை ஆகாது. இது ஒரு ஏமாற்று வித்தை, தவறான கையாளுகை, சூழ்ச்சி அல்லது தவறான பிரதிநிதித்துவம் ஆகும் மேலும் இத்தகைய செயல்களுக்கு நீதிமன்றத்தின் நீதியான மற்றும் சிறப்பு அதிகார வரம்பில் இடமே இல்லை. ஒரு மனுதாரர் அனைத்து முக்கிய உண்மைகளையும் நேர்மையாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்தாமல் அவற்றை உருமாற்றி நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்தினால் நீதிமன்றம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் தனது நடைமுறைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும் எதிர்க் காரணம் இல்லையேல் (Rule Nisi) உறுதியாகக் கூடிய இடைக்கால உத்தரவை ரத்து செய்துவிட்டு அந்த வழக்கின் தகுதிகள் குறித்து மேற்கொண்டு ஆராய மறுப்பதற்கும் அதற்குத் உள்ளார்ந்த அதிகாரம் உள்ளது. அந்த அடிப்படையில் மனுவைத் தள்ளுபடி செய்யாவிட்டால் நீதிமன்றம் தனது கடமையிலிருந்து தவறியதாகக் கருதப்படும். உண்மையில் அத்தகைய மனுதாரர்

நீதிமன்ற நடைமுறையைத் தவறாகப் பயன்படுத்தியதற்காக நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும்."

தனஞ்சய் சர்மா எதிர் ஹரியானா மாநில அரசு [(1995) 3 எஸ்.சி.சி 757] வழக்கில் ஒரு பொய்யான ஆணையுறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்ததே நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுப்பதற்கான அடிப்படையாக அமைந்தது மேலும் அதற்காகச் சம்பந்தப்பட்ட நபர்கள் தண்டிக்கப்பட்டனர்.

17. தற்போதைய சூழ்நிலைகளின் அடிப்படையில் இந்த நீதிமன்றத்தின் அதிகாரத்தைத் தானாக முன்வந்து பயன்படுத்தி மனுதாரருக்கு எதிராக ஏன் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்றும் குற்றவியல் விசாரணைமுறைச் (குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973) சட்டப் பிரிவு 195(1)(a)(i)–ன் கீழ் ஏன் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படக்கூடாது என்றும் விளக்கம் கேட்டு அவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட வேண்டியது அவசியமாகிறது. இந்த விவகாரத்தைத் தானாக முன்வந்து எடுக்கப்பட்ட ஒரு வழக்காகப் பதிவு செய்யுமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிடப்படுகிறது மேலும் இந்த உத்தரவின் நகலை மனுதாரருக்கு அனுப்பி அவர் வரும் 14.01.2020 அன்று நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

18. மேற்கூறிய கருத்துகளுடன் இந்த நீதிப்பேராணை மனு தீர்வளிக்கப்படுகிறது.

நீதிப்பேராணை மனு தீர்வளிக்கப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."